நான் ஒரு பாடநூல். என் பெயர் ______ கோலாலம்பூரில் ஆற்றல் மிக்க தமிழ் ஆசிரியர்களால் நான் உருவாக்கப்பட்டேன். புகழ்பெற்ற ஓர் அச்சகத்தால் அழகான ______ பெற்றேன்.

என்னோடு பலர் உருவாக்கப்பட்டனர். அவர்களில் பலர் பள்ளிகளுக்கும் புத்தகக் ______ அனுப்பப்பட்டனர். நானும் நண்பர்கள் சிலரும் காஜாங்கில் உள்ள ஒரு தமிழ்ப்பள்ளிக்கு அனுப்பப்பட்டோம். அங்கு ஆறாம் ஆண்டு மாணவனான அறிவுச்சுடருக்கு அவன் ஆசிரியர் என்னை வழங்கினார்.

அறிவுச்சுடர் பள்ளியின் மாணவர் தலைவன்; பொறுப்புமிக்கவன். அவன் எனக்குப் ______ போட்டு என் மேனி அழுக்காகாமல் பாதுகாத்தான்.

தமிழ்மொழி ஆசிரியர் செல்வி கனிமொழியாள் தமிழ்மொழிப் பாடம் நடத்தும்போது, அறிவுச்சுடர் என்னைப் பயன்படுத்துவான். வீட்டில் ______ இருக்கும்போதெல்லாம் என்னுள் இருக்கும் நாடகம், கவிதை, விடுகதை, கதைகள், கட்டுரைகளை வாசித்து மகிழ்வான். அவன் அறிவுப் பசிக்கு நான் ______ நின்று உதவினேன்.

ஒரு நாள் நாங்கள் வசித்த வீடமைப்புப் பகுதி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது. வீடுகளில் வெள்ளம் புகுந்தது. அறிவுச்சுடரின் குடும்பத்தினர் உயிர் பிழைத்தால் போதும் எனக் கருதி தங்களுடைய வீட்டிலிருந்து ______. அறிவுச்சுடர் என்னை மறந்துவிட்டான். நான் நீரில் மூழ்கித் திணறினேன். என் உடல் தண்ணீரில் ஊறிப் பெருத்துப் போனது.

மழை நின்றபாடில்லை. வெள்ளத்தின் நீர்மட்டம் உயர்ந்தது. நான் நீரின் சுழற்சியில் சிக்கி, ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டேன். இருப்பினும் அறிவுச்சுடரின் அறிவு வளர்ச்சிக்கு உதவியதை எண்ணிப் ______

| | | | |
|---|---|---|---|
| வளர்தமிழ் | பெருமைப்படுகிறேன் | துணையாக | நெகிழிச் சட்டை |
| வடிவம் | வெளியேறினர் | ஓய்வாக | கடைகளுக்கு |

LIVEWORKSHEETS